incident is said to have taken place on 8th August 1963. The House was in session from 6th to 17th August 1963. This matter has not been brought before the House then. This matter is already old.

SRI M. KALYANASUNDARAM : On the point of delay, I want to explain.

MR. SPEAKER : All right. The hon. Member may please explain.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் விரும்புவது போல சென்ற சட்டசபை கூட்டத்திலேயே இந்த விஷயத்தை ஏன் கொண்டுவரவில்லை என்பதற்கு காரணம் கூற விரும்புகிறேன். நான் அந்த தேதிகளில் சபைக்கு வர முடியவில்லை. அதையொரு காரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அப்பொழுதே கொண்டு வந்திருந்தாலும் அரசாங்கம் விசாரணை நடத்தப்போகிறார்கள், அதற்குள் அவசரப்பட்டு கொண்டு வந்து விட்டார்கள் என்று சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது கொண்டு வரவில்லை. இப்பொழுது நான் அவசரப் பிரேரணையாக கொண்டு வந்து இருப்பது அன்று நடந்த சம்பவத்தைப்பற்றி அல்ல. ஆனால் அரசாங்கம் விசாரணை நடத்த தவறிவிட்டது, இதுவரை எந்த ஏற்பாடும் செய்யவில்லை, எந்த உத்தரவும் இடவில்லை என்பதை சுட்டிக் காட்டத்தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைவர் அவர்களே, இது சமீபத்தில் நடந்த சம்பவம் அல்ல. அது மட்டுமல்லாமல் இது அவசர பிரேரணைக்கு உரிய ஒரு விஷயமும் அல்ல. அவசர கேள்வி கேட்கலாம். அல்லது கால் அட்டென்ஷன் நோட்டீஸ் 41-வது விதிப்படி கேட்கலாம்; அப்பொழுது என்ன நடந்தது என்பது பற்றி ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம். ஆனால் இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I withhold consent.

TRUTH ALONE TRIUMPHS

(2) REFUSAL OF MANAGEMENTS OF SOME TEXTILE MILLS TO GIVE BONUS TO THEIR WORKERS.

MR. SPEAKER : I have also received notice of another adjournment motion from Sri M. S. Mani regarding the refusal of the managements of the Hasar Textiles, Pankaja Mills and Kathri Mills and Sudarsan Textiles to give bonus to their workers with a view to wreak vengeance on their workers and the declaring of a lock-out of the mills concerned and thus throwing out of employment 5,000 workers.

திரு. எம். எஸ். மணி : சபாநாயகர் அவர்களே, கோவை மாவட்டத்திலே நான்கு மில்கள் லாக்அவுட் செய்து இருக்கிறார்கள். அந்த நான்கு மில்களிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் தவிக்கிறார்கள்.

ஆகவே, அந்த மில்களை திரும்பவும் திறப்பதற்கும் வேலையற்ற தொழிலாளர்களுக்கே திரும்ப வேலை வாய்ப்பு கிடைக்கவும் இந்த பிரேரணையை விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்பதை முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். ஆண்டு தோறும் போனஸ் விஷயம் கோவையில் பல மில்களிலே சமரசமாக தீர்க்கப்பட்டு வந்து இருக்கிறது. இந்த ஆண்டு சில மில்களில் சுமுகமான முடிவு ஏற்படவில்லை என்ற காரணத்தினால் இரு சாராரோடும் பேசி, தொழிலாளர்கள் தொழில்திபர்கள் இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவு ஏற்பட்டது. இருந்தாலும் சில தொழிலாளர்கள் கொஞ்சம் அதிகமாக கொடுங்கள் என்று கொந்தரவு கொடுத்தால் சமரசத்திற்கு முரணாக நடந்ததால் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அந்த விஷயம் தொழிலாளர் இலாகாவினால் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்த விஷயம் ஒரு அவசர பிரேரணைக்கு உரியது அல்ல; அதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கூறக்கூடிய விஷயம் அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The Industrial Disputes Act prescribes the procedure for settling industrial disputes. In the present case recourse could be had for settling the dispute to the various agencies prescribed under the Act. Before the matter could be dealt with by those agencies, there is no need to bring the matter to the notice of the House. Therefore, consent is withheld.

IV—PRIVILEGE MATTER.

SUB-EDITORIAL IN THE "DINAMANI"

MR. SPEAKER: Mr. M. Kalyanasundaram has given a notice of a matter of privilege. The matter relates to an editorial written in the Tamil Daily "Dinamani", dated the 25th October 1963.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரிகையைப் பற்றி ஒரு உரிமைப்பிரச்னை கொண்டு வருவது என்பது அவ்வளவு உற்சாகம் அளிக்கும் விஷயம் அல்ல. இந்த விஷயத்தை நான் வருத்தத்தோடு தான் கொண்டு வந்து இருக்கிறேன். பத்திரிகைகளுக்கு, சுதந்திரம் இருக்கக்கூடாது, நம்முடைய சபையின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யக்கூடாது என்று சொல்ல வரவில்லை. ஆனால் பத்திரிகையில் வருவதற்கு பதில் சொல்ல சந்தர்ப்பம் கிடையாது. அரைகுறை ஞானத்தை வைத்துக் கொண்டு எழுதப்படும் கருத்துக்களுக்கு ஒரு தெளிவு கூற வேண்டும், அதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்று தங்களை இந்த பிரச்சனைக்கு தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.